Public Service Guarantee for Data Handling - Information Rights
Division - 2
Tamil

# உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை நாங்கள் கையாள விரும்புகிறோம். இதனால் உங்களுக்கான சேவைகளை எங்களால் அளிக்க இயலும். பின்வரும் வழிகளில் நாங்கள் அத்தகைய தகவல்களைப் பார்ப்போம்.

**உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைக் கேட்கும் பொழுது, பின்வருவனவற்றை நாங்கள் உறுதி கூறுகிறோம்:**

- அவை எதற்காக எங்களுக்குத் தேவைப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்போம்;
- எங்களுக்குத் தேவையானதை மட்டும் தான் கேட்போம். கூடுதல் அல்லது தேவையற்ற தகவல்களை நாங்கள் சேகரிக்க மாட்டோம்;
- தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருந்து, தேவையற்ற எவருக்கும் அதனைக் கொடுக்க மாட்டோம்;
- சட்டம் அனுமதித்தால் மட்டும் மற்ற சங்கங்களுடன் அதனை நாங்கள் பகிர்ந்து கொள்வோம்;
- தேவையான நேரத்திற்கும் மேலாக அத்தகவல்களை நாங்கள் வைத்திருக்க மாட்டோம்; மற்றும்
- உங்கள் அனுமதி இல்லாமல், விளம்பரத்திற்கென உங்கள் தனிப்பட்ட தகவல்களை பயன்படுத்த மட்டோம்.

**இதற்கு பதிலாக நாங்கள் பின்வருவனவற்றை உங்களிடம் கேட்கிறோம்:**

- சரியான தகவல்களை மட்டும் எங்களுக்குத் தர வேண்டும்; மற்றும்
- புதிய முகவரி போன்ற மாற்றங்கள் ஏற்பட்டால், எங்களுக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

**இதனால் உங்கள் தகவல்களை சரியானதாகவும் நம்பத்தகுந்ததாகவும் வைத்திருக்க எங்களுக்கு உதவும்.**

**பின்வருவனவற்றில் மேலும் தகவல்களை நீங்கள் பெறலாம்:**

- எங்களிடம் எத்தகவல்கள் உள்ளது மற்றும் தவறுகள் இருந்தால், அவற்றை சரியாக்கவும் எங்களிடம் கூறலாம்;
- தகவல் பரிமாற்றம் பற்றி மற்ற சங்கங்களுடன் எங்களுக்குள்ள ஒப்பந்தங்கள்;
- உங்களிடம் கேட்காமல் எப்பொழுது நாங்கள் தகவல்களை மாற்றிக் கொள்ளலாம், எடுத்துக்காட்டாக, சட்டப்படி குற்றத்தைத் தடுக்கவும் கண்டுபிடிக்கவும் அல்லது இரகசிய தகவல் சேமிப்பிற்கும்;
- உங்கள் தகவல்களை எவ்வாறு சேகரிக்க வேண்டும், உபயோகிக்க வேண்டும் மற்றும் எவ்வாறு அகற்ற வேண்டும் பற்றிய எங்கள் ஊழியர்களுக்கான தகவல்கள்;
- எங்களிடம் உள்ள தகவல்கள் இப்போதைய தேதி வரை சரியானதாக இருப்பதை எவ்வாறு நாங்கள் சோதிக்கிறோம்; மற்றும்
- எவ்வாறு புகார் செய்யலாம்.

**மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து தொடர்பு கொள்க:**

**உங்களிடம் நாங்கள் தகவல்களைக் கேட்கும் பொழுது, 1998 ஆம் வருடத்திய தகவல் பாதுகாப்புச் சட்டம் உட்பட சட்டத்திற்கு உட்பட்டு தான் தகவல்களை சேகரிக்கிறோம். தகவல் பாதுகாப்பு, தனிப்பட்ட மற்றும் தகவல் பரிமாற்றம் பற்றிய ஆலோசனைக்கு, இன்ஃபார்மேஷன் கமிஷனருடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்: Information Commissioner, Wycliffe House, Water Lane, Wilmslow, Cheshire, SK9 5AF.**

**தொலைபேசி: 01625 545745 தொலைநகல்: 01625 524510 இமெயில்: mail@dataprotection.gov.uk**

**இணைதளம்: www.informationcommissioner.gov.uk**